செ. வெ. எண் : 416 நாள் 07–07–2007

# செய்தி வெளியீடு

## சென்னைக்கு கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தினை ஓராண்டுக்குள் முடித்திட உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (07.07.2007) தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், பேரூராட்சிகள் குறித்து சட்டமன்றத்தில் அறிவித்தத் திட்டங்களை ஆய்வு செய்தார்கள். ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மூலம், வடசென்னையில் 3 நவீன குப்பைமாற்று நிலையங்கள் மற்றும் தென் சென்னையில் 2 குப்பைமாற்று நிலையங்கள் ரூ. 7.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

தங்கசாலை சந்திப்பு, பேசின்பால சாலை, காக்ரேன் பேசின் சாலை சந்திப்பு மற்றும் திருவான்மியூர் எல்.பி. சாலை, மத்திய கைலாஷ், ஐ.டி. காரிடார் சந்திப்பில் மேம்பாலப் பணிகள் உடனடியாக துவக்கிட உத்தரவிட்டார்.

பெரம்பூர் மேம்பாலப் பணிகள் உடனடியாக புதிய வடிவமைப்பின்படி பணிகள் உடனடியாக தொடங்கிடவும், வடக்கு உஸ்மான் சாலை – கோடம்பாக்கம் நெடுங்சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பு, டர்ன்புல்ஸ் சாலை – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை சந்திப்பு ஆகியவற்றில் மேம்பாலப் பணிகள் துரிதப்படுத்தி, குறித்தக் காலத்திற்குள்ளாக முடித்திடவும் கேட்டுக் கொண்டார்.

சென்னை மாநகரத்தில், ஈ பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை துரிதப்படுத்த வேண்டும் என்றும், குப்பைகளையும், கட்டிட இடிபாடுகளையும் உடனுக்குடன் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்திரவிட்டார்.

அண்ணாச்சாலையில் அதிக வெளிச்சத்துடன் கூடிய புதிய மெட்டலைடு தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை துரிதப்படுத்திட அறிவுறுத்தினார்.

ஒவ்வொரு மண்டலத்திலும் அனைத்துப் பணியாளர்களையும் ஒருங்கிணைத்து, சாலைப் பகுதிகளை தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும்,

பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக மழைநீர் வடிகால் பணிகளை மேம்படுத்தி, மழைநீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ள பல்வேறு துறைகளை இணைத்து செயல்படவும் அறிவுறுத்தினார்.

மீஞ்சூர் அருகிலுள்ள காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என உத்திரவிட்டார்.

நெம்மேலியில் 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் மற்றொரு நிலையம் அமைப்பதற்கான நிதியை இந்திய அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஆணையிட்டார்.

மேலும் சென்னை மாநகர குடிநீர் மேம்பாட்டு பணிகள், தகவல் தொழில்நுட்ப சாலையை (ஐ.டி. காரிடார்) ஒட்டியுள்ள நுகர்வோர்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகள், பெருங்குடியில் மற்றுமொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் புறநகர் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் ஆகியவை தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார்.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பேரூராட்சிகளில் விரைவில் செயல்படுத்தப்படக் கூடிய வகையில் பணிகளை துரிதப்படுத்திட அறிவுறுத்தினார்.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகளை கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு. தீனபந்து, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சிவதாஸ் மீனா, இ.ஆ.ப., பேரூராட்சிகள் துறை இயக்குநர் டாக்டர் கோபால், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் திரு மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி இணை ஆணையர் திருமதி காக்கர்லா உஷா, இ.ஆ.ப., துணை ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப ஆகியோர் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.